**கம்புறுபிட்டிய பிரதேச சபை - 2022**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 33,000 பெறுமதியான காணி ஒன்று மற்றும் ரூபா 18,172,144 தொகை பெறுமதியான 05 வாகனங்கள் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான பௌதீக ரீதியாகக் காணப்படாத ரூபா 225,525 தொகை பெறுமதியான 04 வாகனங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,435,500 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 560,000 இற்கான பெறுமதியைக் கொண்ட போர்வீரர் தூபம் பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் ரூபா 110,082 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 100,287,747 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 581,944 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கில் மேலும் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 462,504 இற்கான செலவு மீதி மீளாய்வாண்டு இறுதி வரை தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இது தொடர்பாக கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 381,343,967 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நி.பி. 103 மற்றும் 104 | கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2020 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டில் இனங்காணப்பட்ட ரூபா 80,120 இற்கான பண்டப் பற்றாக்குறை ஒன்று தொடர்பாக | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

2021 ஜனவரி 12 திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் பதிவழிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,662,212 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,406,094 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,243,280 | 7,426,909 | 3,671,984 | 5,514,317 | 3,170,000 | 1,502,521 | 1,223,447 | 1,759,392 |
| வாடகை | 8,204,800 | 9,004,009 | 6,767,122 | 6,325,137 | 9,591,800 | 3,398,147 | 714,556 | 4,088,250 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,018,500 | 1,391,990 | 2,229,813 | 38,300 | 1,301,500 | 5,298,693 | 4,674,765 | 876,123 |
| ஏனைய வரு மானங்கள் | 1,055,000 | 26,382,554 | 26,906,202 | 185,925 | 16,685,000 | 21,142,690 | 20,433,117 | 709,573 |
| மொத்தம் | 13,521,580 | 44,205,462 | 39,575,121 | 12,063,679 | 30,748,300 | 31,342,051 | 27,045,885 | 7,433,338 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,591,652 தொகையாகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 2,044,293 தொகையாகக் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரிக்காக ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை இனங்கண்டு வரைபுகள் தயாரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யும் சட்டத்தின் 20 ஆவது பிரிவுக்கு இணங்க வீதவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வருடாந்த பெறுமதியின் மீது வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 2015 ஆண்டிற்கான வீதவரி ஆதன பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டு இருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீட்டிற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | நாளதுவரை ஆக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி மீது வரி அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்கு சொந்தமான 234 கடையறைகளில் 95 கடையறைகளிலிருந்து மாத்திரம் ரூபா 4,991,543 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபச/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க 2022 திசெம்பர் 31 திகதியளவில் சபைக்குச் சொந்தமான 13 இடங்களில் காணப்படும் 68 கடையறைகள் தொடர்பாக கடை வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காத 13 வர்த்தக தொடர் கட்டிடங்களுக்குரிய 216 கடையறைகள் தொடர்பாக 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய வாடகை பெறுமதி மதிப்பீடு திருத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டினை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய காலப் பகுதியில் வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,368,362 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 46,327,223 தொகை காணப்பட்டது. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126(VIII) இன் பிரகாரம் நகர் சாராத பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பிரமாணங்களில் உள்ளடங்கிய துணை விதிகள் சட்ட ஆக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணை விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | துணை விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்புறுப்பிட்டிய பிரதேச சபையின் நகர்சார் அபிவிருத்தி அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் 02 தொன் குப்பை சேகரிக்கப்படும் உக்கக் கூடிய குப்பைகளை கம்புறுபிட்டிய பொதுச் சந்தைக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில் போடப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. மேலும் குப்பை போடப்படும் இடம் கம்புறுபிட்டிய நகரத்துக்கு அண்மித்த மக்கள் செறிவுள்ள இடமொன்றாக காணப்படுவதுடன், இவ்வாறு திறந்த தரைப் பகுதியில் குப்பைகளை போடுவதன் காரணமாக சுற்றியுள்ள இடங்களுக்கு துர்நாற்றம் வீசக்கூடியதனால் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து நிலை ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | முறைசார் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது என. | குப்பை முகாமைத்துவத்தை முறைப்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 31 காணித் துண்டுகளின் பெறுமதி மற்றும் 02 வாகனங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொண்ட பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செயற்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாரின் PR/01/01 மற்றும் 2010 ஆகஸ்ட் 17 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க வீதிவிளக்குகள் பொருத்தப்படாமையால் ரூபா 1,714,829 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக நிலுவைத் தொகை மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க கம்புறுபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இலங்கை சுற்றலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்துக்கு இணங்க வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 3,442,936 தொகைக்கான 24 கொள்வனவுகள் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி இலக்கம் 207 இற்கு இணங்க கூறுவிலைகள் அழைக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் அனைத்துக் கொள்வனவுகளும் உரிய விதிக்கு இணங்க மேற்கொள்ளப்படும் என. | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெலன்கஹவத்த மற்றும் கஹன குட்டிய பாதையை அபிவிருத்தி செய்யும் போது உரிய ரேட்டுகள் பயன்படுத்தப்படாமையால் ஒப்பந்த சங்கத்துக்கு ரூபா 180,631 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண வீதி அதிகார அபிவிருத்தி சபையின் கூறுவிலைகள் பயன்படுத்தப்பட்டதுடன் அந்த மண் வெட்டும் இயந்திரங்களின் மண் வெட்டும் முறை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன், அது தொடர்பாக தொடர்ந்தும் உரிய நிறுவனத்தில் இருந்து விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | HSR ரேட் கடைபிடிக்கப்பட வேண்டும் |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் சபையில் சேவையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த, சேவையை விட்டுச் சென்றிருந்த மற்றும் இறந்த 18 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 230,612 இற்கான கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |